கோவிந்தசாமி நகர், இளங்கோ தெருவில் உள்ள குடியிருப்புகளை அகற்றும்படி நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. பக்கிங்காம் கால்வாய் வடபகுதியிலுள்ள கால்வாயை ஒட்டியுள்ள 366 குடியிருப்புகள் அகற்றப்பட்டு விட்டன. நாளே உடனிருந்து அந்த வீடுகளை அகற்ற வேண்டும் என்று அங்குள்ள மக்களுக்கு சொல்லி, அவர்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்கப்பட்டு விட்டன. ஆனால் தென்புறத்திலுள்ள 259 குடியிருப்புகள் கால்வாயையொட்டி அமையவில்லை. இந்தத் தீர்ப்பினால் சுமார் 45 ஆண்டு காலம் அப்பகுதியில் வீடுகட்டி கொண்டு குடியிருந்து வந்த சுமார் 260 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடியிருப்புகளை இழக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வாரியம் கோவிந்தசாமி நகர் பிரச்சினையை சரியாக எடுத்துரைத்திருந்தால் இத்தகைய தீர்ப்பு வந்திருக்காது. இதனால், அங்குள்ள மக்கள் மிகுந்த மனவேதனைக்குள்ளாகி உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகிவிட்டது. ஏனவே, மனிதாபிமான அடிப்படையில் தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களின் அரசு அந்தப் பகுதி மக்களின் நலன்கருதி, நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு அளித்து, அக்குடிசைப் பகுதி தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடமாக அறிவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை நெஞ்சார கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிந்தசாமி நகரினுடைய பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீவிரமாக செயல்பட்டு, என்னுடைய கவனத்திற்கு ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, பலமுறை கொண்டுவந்திருக்கிறார்கள்; அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களும் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கரையோரங்களில் இருந்த குடிசைகளெல்லாம் அகற்றப்பட்டுவிட்டன. தனி நபர் ஒருவர் பல வழக்காடு மன்றங்களில் வழக்கு போட்டு, தீர்ப்பு பெற்று, இறுதியாக உச்ச நீதிமன்றம் வரை சென்று, அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டுமென்று அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்து, அங்கு, நிரந்தரமாக பல உறுதியான வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியிருப்போர்களுடைய வாழ்வாதாரங்களைக் பாதிக்காத வகையில் வழக்காடு மன்றங்களில் தீவிரமாக ஈடுபட்டு, நல்ல தீர்ப்பினைப் பெற வேண்டும் என்ற கருத்தினையும் இங்கே பதிவு வைத்திருக்கின்றார்கள். அதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதுவரை, எந்தவகையிலும் அந்தப் பகுதி மக்களின் பாதுகாப்பில் குறைவில்லாத நிலையில் அவர்கள் பாதுகாக்கப்பட்டு, அந்தப் பகுதியில் குடியிருந்து வருகின்றனர் என்பதையும் எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, உச்ச நீதிமன்றத்தில் மறு சீராய்வு மனு தாகல் செய்து, அந்தப் பகுதி மக்களின் பாதுகாப்புக்கு உரிய வழிவகைகளை அரசு உறுதியாக செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் குடியிருப்புகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக சென்னை மாநகரத்தில் பீட்டர்ஸ் காலனி, தாட்ண்டர் நகர், என்னுடைய கொளத்தூர் தொகுதி உள்ளிட்ட பல இடங்களில் இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் குடியிருப்புகள் பல ஆண்டுகாலமாக பழுதடைந்த நிலையில் இருக்கக்கூடிய காரணத்தால் அவற்றை இடித்துவிட்டு புதிதாக கட்டுகிற பணியிலே அரசு இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில், அதை இடிக்கின்ற சூழ்நிலையில், அங்கு இருக்கக்கூடியவர்களை காலி செய்து, அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துகின்ற நேரத்தில் புதிதாக அந்த வீடுகளைக் கட்டி அவர்களுக்கே அதை உரிமையாக்கக்கூடிய சூழ்நிலையினை ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

Scanned by CamScanner

2018 debate by rps



17 குடியிருப்புத் தொகுப்புகள் கட்டப்பட்டு அதில் 136 குடியிருப்புகள் உள்ளன. தற்சமயம் இக்குடியிருப்புகள் கட்டப்பட்டு சுமார் 48 ஆண்டுகளாகின்றன. மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள இக்குடியிருப்புகளை இடித்து விட்டு புதிய குடியிருப்புகளை கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், 2016–2017 ஆம் ஆண்டு வீட்டுவசதித் துறை மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் சென்னை, மந்தவெளிப்பாக்கம் மற்றும் நந்தனம், சி.ஐ.டி. நகரில் நீதிமன்ற வழக்குகள் முடிவுற்றபின், வாரிய வாடகைக் குடியிருப்புகளை இடித்து விட்டு புதிய குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானப் பணிகள் துவங்கப்படுமென கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பணிகளை விரைந்து செயல்படுத்திட உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட ரூ.202 கோடி மதிப்பீட்டில் 122–வது வார்டு, நந்தனத்தில் அலுவலக வளாகம் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தர உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு என்னுடைய பதில் தரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டினம்பாக்கம் பகுதியில் இருக்கின்ற குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக பழுதடைந்த வீடுகளை இடித்துவிட்டு கட்டித் தரப்படுமா என்று கேட்கிறார். இப்போது, பழுதடைந்த வீடுகள் ஒவ்வொன்றாக ஆய்வு செய்யப்பட்டு, அவற்றையெல்லாம் இடித்துவிட்டு, மறு கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. மொத்தம் 17, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டத்தின்மூலமாக கட்டப்பட்ட, தகுதியில்லாத, குடியிருப்பதற்கு லாயக்கற்ற நிலையில் இருக்கின்ற வீடுகளையெல்லாம் இடித்துவிட்டு மறு கட்டுமானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் 7 திட்டப் பகுதிகளில் தற்போது இடிக்கின்ற பகுதிகள் இருக்கின்றன. அங்கே அரசு ஊழியர்கள் குடியிருந்து வருகின்ற காரணத்தினால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாற்றுக் குடியிருப்புப் பகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டபின், இந்தப் பணிகளெல்லாம் நிறைவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற இரண்டு திட்டப் பகுதிகளைச் சொன்னார்கள். அவையெல்லாம் ஆய்வில் நிலையில் இருக்கின்றன. அவையெல்லாம், அரசினுடைய ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, திட்டம் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.


திரு. ஆர். நடராஜ்: விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கூறியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு முக்கியமான பிரச்சினை. மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி 173–வது வார்டில் இராஜா அண்ணாமலைபுரம் அருகில் கோவிந்தசாமி நகர் என்ற ஒரு குடிசைப் பகுதி உள்ளது. இப்பகுதியை தமிழக அரசு அரசிதழில் வெளியிட்டுள்ள G.O.(Ms.) No. 1582, நாள் 4–12–1971 அரசாணையின்படி குடிசை பகுதியென அறிவித்துள்ளது. அப்பகுதியில் 1971 ஆம் ஆண்டு முதல் மக்கள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். 1984 ஆம் ஆண்டு அப்பகுதியில் இரண்டு முறை தீ விபத்து ஏற்பட்டதால், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் அப்பகுதி முழுவதையும் சமப்படுத்தி 420 சதுர அடி பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைகளாகப் பிரித்து, அப்பகுதியில் குடியிருந்து வந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதில் குடியிருப்புகளைக் கட்டி, குடிநீர் இணைப்பு, மின்னிணைப்பு, பாதாள சாக்கடை வசதி பெற்று மக்கள் குடியிருந்து வருகின்றனர். இந்நிலையில் தனி நபர் ஒருவர் நீதிமன்றத்தில் தொடுத்த பொதுநல வழக்கு ஒன்றின் அடிப்படையில்

Scanned by CamScanner

<u>முக்கிய பிரச்சினை</u>

- எனது தொகுதியில், இராஜா அண்ணாமலைபுரம், கோவிந்தசாமி நகர் என்ற பகுதியானது தமிழக அரசிதழில் வெளியீட்டு GO(MS)No.1582 நாள் 14.12.1971 அரசாணைப்படி அறிவிக்கப்பட்ட குடிசை பகுதி (Notified Slum) ஆகும். தனிநபர் தொடர்ந்த பொது நல வழக்கின் காரணமாக கோவிந்தசாமி நகர் இளங்கோ தெருவில் 60 வருடங்களாக வசித்து வரும் 250 குடும்பங்கள் வீடுகளை இழக்கும் அபாயம் உள்ளதால். இப்பிரச்சனை தொடர்பாக சட்டமன்றத்தில் 11.06.2018 அன்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினரால் கேள்வி எழுப்பபட்டு அதற்கு பதிலாக அன்றைய துணை முதல்வர் இன்றைய எதிர்கட்சி துணை தலைவர் அவர்கள் அரசு சார்பில் மறுசீராய்வு மனுதாக்கல் செய்யப்பட்டு அவர்கள் பாதுகாப்புடன் வாழ உறுதி செய்யப்படும் என்றார். ஆனால் அது செய்யபடாத காரணத்தினால் இன்று அந்த தனிநபர் நீதிமன்ற அவமதிப்பு ஆணை ஒன்றை பெற்று மக்களை பயத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார். ஆகவே, மாண்புமிகு முதல்வர் இதிலே தலையிட்டு அந்த குடும்பங்களை காபாற்றிடும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.


ADVERTISEMENT




மணிராம் சர்மா .

திற
செயலி

தந்தையும் மகனும் பொருட்களை வழங்காததால் மணிராம் போலீஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் அலுவலகத்தில் புகார் அளித்தார் . இந்தப் புகார், பணிமனை ஆவணத்தின் மோசடிப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. நகரில் உள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ரித்தேஷ் மற்றும் ராஜீவ் சிறையில் அடைக்கப்பட்டனர். tnn



11-6-2018

# மயிலாப்பூர் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பிரச்னை: சீராய்வு மனு தாக்கல்

## துணை முதல்வர் ஓபிஎஸ் உறுதி

சென்னை, ஜூன் 11: சென்னை மயிலாப்பூர் கோவிந்தசாமி நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பிரச்னையில் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்று துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உறுதி அளித்தார்.

சட்டப் பேரவையில் திங்கள்கிழமை கேள்வி நேரத்தின் போது, மயிலாப்பூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.நடராஜ் கேள்வி எழுப்பினார். அப்போது நடந்த விவாதம்:

ஓ.பன்னீர்செல்வம்: பட்டினப்பாக்கம் மறு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடியிருப்புகளைக் கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய தனியார் நிறுவனம் முன் வைப்புத் தொகையைச் செலுத்தவில்லை. இதனால், அதனுடைய மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுமான நிறுவனத்தைத் தேர்வு செய்ய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆர்.நடராஜ்: 126-ஆவது வட்டமான பட்டினப்பாக்கம் பகுதியில் உள்ள குடியிருப்பு 1967-70-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.



அங்கு 17 குடியிருப்புத் தொகுப்புகளில் 136 குடியிருப்புகள் உள்ளன. இவற்றை இடித்து மறு கட்டுமானம் செய்வதுடன், நந்தனத்தில் அலுவலக வளாகம் கட்டும் திட்டம் 110-விதியின் கீழ் அறிவிக்கப்பட்டது. இவற்றையும் செயல்படுத்த வேண்டும்.

ஓ.பன்னீர்செல்வம்: தமிழகத்தில் மிகவும் பழுதடைந்து, குடியிருப்பதற்கு லாயக்கற்ற நிலையில் இருப்பதாக 17 வீட்டுவசதி திட்டக் குடியிருப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் ஏழு கட்டப் பகுதிகளை இடிக்கும் பணி நடந்து வருகிறது.

அவர்கள் அரசு ஊழியர்கள் என்பதால் மாற்று இடஒதுக்கீடு செய்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆர்.நடராஜ்: ராஜா அண்ணாமலைபுரம் கோவிந்தசாமி நகர் பகுதியில் நீதிமன்ற உத்தரவால் பக்கிங்ஹாம் கால்வாயை ஒட்டியுள்ள குடியிருப்புகள் அகற்றப்பட்டன. தெற்குப் பகுதியில் உள்ள 259 குடியிருப்புகள் ஆற்றங்கரையோரம் இல்லை. ஆனால், தீர்ப்புக் காரணமாக இடிக்கும் அபாயம் உள்ளது. எனவே, இது தொடர்பாக மக்களின் நலன் கருதி நீதிமன்றத்தில் சீராய்வு மனு செய்ய வேண்டும்.

ஓ.பன்னீர்செல்வம்: தனிநபர் வழக்கின் காரணமாக, நீதிமன்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டு வீடுகள் இடிக்கப்படும் நிலை உள்ளது.

எனவே, வீடுகள் இடிக்கப்படாதபடி மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு நல்ல தீர்ப்பைப் பெற முயற்சிகள் எடுக்கப்படும்.

2/16